

(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(14).]

பாராளுமன்றத்தின்
4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2026 நவம்பர் 28, சனிக்கிழமை வெளியிடப்பட்டது

திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 139/2026

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்,— இலங்கையின் சுயாதீன இளைஞர் ஆணைக்குழு ஒன்றை நிறுவுவது குறித்து விசாரணை செய்து அதன் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு,— இலங்கையின் இளைஞர்கள் நாட்டின் மிகப் பெறுமதிமிக்கதும் ஆற்றல்மிக்கதுமான வளமாவர். அவர்கள் வெறுமனே ஒரு குடித்தொகைப் பிரிவினராக மாத்திரமன்றி, தேசிய மறுமலர்ச்சியின் உந்துசக்தியாகவும் திகழ்வதாலும்;

உலகளாவிய ரீதியிலும் எமது நாட்டிலும் இளைய தலைமுறையினர் தற்போதைய அரசியல் முறைமைகள் மீது அதிருப்தியடைந்து, ஆட்சிமுறை குறித்து நம்பிக்கையிழந்து, சனநாயகச் செயன்முறையிலிருந்து விலகிச் செல்வதாலும்;

தமது எதிர்காலத்தைப் பாதிக்கும் தீர்மானங்கள் தமது பங்களிப்போ அல்லது குரலோ இன்றி எடுக்கப்படுவதாகப் அவர்கள் உணர்வதால், பொது நிறுவனங்கள் மீதான இந்த நம்பிக்கைச் சிதைவானது, நவீன ஜனநாயக நாடுகள் எதிர்நோக்கும் மிகப் பாரிய சவால்களில் ஒன்றாகவிருப்பதாலும்;

இலங்கை தனது ஜனநாயக அடித்தளங்களைப் பாதுகாக்க வேண்டுமாயின், இளைஞர்கள் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுபவர்களாகவும், உள்வாங்கப்படுபவர்களாகவும், தமது கருத்துக்களுக்குச் செவிசாய்க்கப்படுவதாகவும் உணரச் செய்யும் நிறுவன ரீதியான பொறிமுறைகளை உருவாக்குவதன் மூலம் அவர்களின் நம்பிக்கையையும் பங்களிப்பையும் மீளக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளதாலும்;.

இளைஞர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதும், அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதும், தேசியக் கொள்கைகளில் அவர்களின் கண்ணோட்டங்களை ஒருங்கிணைப்பதுமான ஒரு கட்டமைப்பாக சுயாதீன இளைஞர் ஆணைக்குழுவை நிறுவுவது இவ்விடயத்தில் ஒரு தீர்க்கமான படியாக அமையுமென்பதாலும்;

அண்மையில் சுயாதீன மகளிர் ஆணைக்குழு உருவாக்கப்பட்டமையானது பால்நிலை உள்ளடக்கத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் ஒரு பாராட்டத்தக்க நடவடிக்கையாக அமைந்துள்ள அதேவேளை, இளைஞர்களின் ஈடுபாட்டிற்கான கட்டமைக்கப்பட்டதும் சுயாதீனமானதுமான ஒரு தளத்தை வழங்குவதற்கான சம அளவிலான அவசரத் தேவையும் காணப்படுவதாலும்;

இலங்கையின் இளைஞர்கள் வேலையின்மை, திறன் பொருத்தமின்மை, உளநலப் பிரச்சினைகள் மற்றும் டிஜிட்டல் விலக்கல் முதல் அதிகரித்து வரும் அரசியல் மற்றும் பொருளாதார செயற்பாடுகளால் உரிமையிழப்பு உணர்வு வரையிலான சிக்கலான சவால்களை எதிர்நோக்குவதாலும்;

இம்முயற்சியானது இளைஞர் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்துவது மாத்திரமன்றி, இளம் பிரஜைகளுக்கும் அரச நிறுவனங்களுக்கும் இடையில் அதிகரித்து வரும் நம்பிக்கை இடைவெளியையும் நிரப்புவதாலும்;

இது உள்ளடக்கிய ஆட்சிமுறைக்கான ஒரு புதிய கட்டமைப்பை உருவாக்குவதுடன், அடுத்த தலைமுறையினர் பாராளுமன்றத்தைத் தமக்குத் தூரமானதொன்றாகவன்றி, தம்மைப் புரிந்துகொண்டு பிரதிநிதித்துவப்படுத்தும் உயிரோட்டமான ஒரு நிறுவனமாகக் காண்பதையும் உறுதிசெய்வதாலும்;

பின்வரும் விடயங்களும் உள்ளடங்கலாக, இலங்கையின் சுயாதீன இளைஞர் ஆணைக்குழு ஒன்றை நிறுவுவது குறித்து விசாரணை செய்து அதன் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது:

(அ) இலங்கை முழுவதிலுமுள்ள இளைஞர்களின் சமூக-பொருளாதாரச் சவால்கள், வாய்ப்புக்கள் மற்றும் அபிலாஷைகள்;

(ஆ) இளைஞர் அபிவிருத்தியில் தாக்கம் செலுத்தும் அனைத்து அரசாங்க நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து ஆலோசனை வழங்கவும், கண்காணிக்கவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் அதிகாரமளிக்கப்பட்ட சுயாதீன இளைஞர் ஆணைக்குழுவொன்றின் தேவைப்பாடு;

(இ) உள்ளடக்கத்தையும் புத்தாக்கத்தையும் வெற்றிகரமாக ஊக்குவித்த இளைஞர் ஆணைக்குழுக்கள், சபைகள் மற்றும் குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்) நிறுவனங்களின் சர்வதேச முன்னுதாரணங்கள்;

(ஈ) அத்தகையவொரு அமைப்பினை நிறுவுவதற்கு அவசியமான சட்ட, நிருவாக மற்றும் அரசியலமைப்பு ரீதியான சட்டகம்;

(உ) இளைஞர் தொழில்முயற்சியாண்மை, டிஜிட்டல் திறன்கள், தலைமைத்துவ அபிவிருத்தி, குடிமைப் பங்கேற்பு மற்றும் தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான பொறிமுறைகள்; மற்றும்

(ஊ) ஆணைக்குழுவானது சுயாதீனத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற தன்மையுடன் செயற்படுவதை உறுதிசெய்வதற்கான வழிமுறைகள்.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பன்னிரண்டிற்கு (12) மேற்படாத உறுப்பினர்களை குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேலே குறிப்பிட்ட விடயம் தொடர்பாக விரிவானதோர் ஆய்வினை மேற்கொள்வதற்காக குழுவினால் அவசியமானது எனத் தீர்மானிக்கப்படும் விதத்தில் எவரேனும் ஆளை, குழுவின் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு எவரேனுமொருவருக்கு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்துமூலமாக அல்லது வாய்மொழிமூலமாக பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலோ அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலோ தடைபெறாது கூடுவதற்கும்,

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து மூன்று (03) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தினால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ தாஹிர் மரைக்கார்

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ மனோ கணேசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா,— விதந்துரைக்கப்பட்ட தர நியமங்கள் மற்றும் பாதுகாப்பான நடைமுறைகள், கலாசார விழுமியங்கள் மற்றும் மதச் சுதந்திரம் ஆகியவற்றை மீறும் வகையில், இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்களை அகற்றுதல் தொடர்பான சகல விடயங்களையும் ஆராய்ந்து, பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், தனது முன்மொழிவுகள் மற்றும் விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— உலக சுகாதார ஸ்தாபனம், 2020 மார்ச் 24 ஆம் திகதியன்று வெளியிட்ட 'கொவிட்-19 சூழ்நிலையில் நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்கு உயிரிழந்த ஆளொருவரின் சடலத்தைப் பாதுகாப்பாகக் கையாளுதல்' என்று தலைப்பிடப்பட்ட அதன் இடைக்கால வழிகாட்டலில், கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்யலாம் அல்லது தகனம் செய்யலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாதலாலும்;

சுகாதார அமைச்சினால் 2020 மார்ச் 27 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 'கொவிட்-19 எனச் சந்தேகிக்கப்படும் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகள் தொடர்பான தற்காலிக மருத்துவ நடைமுறை வழிகாட்டல்கள்' என்று தலைப்பிடப்பட்ட சுற்றறிக்கையில், குறித்த சில நிபந்தனைகளுக்கு அமைவாக சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கும், வைத்தியசாலையில் ஒதுக்கப்பட்ட இடத்தில் இறந்தவரின் குடும்பத்தினர் சடலத்தைப் பார்வையிடுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்ததாதலாலும்;

இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர், 2020 நவம்பர் 12 ஆம் திகதியன்று அப்போதைய பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், கொவிட்-19 நோயாளிகளின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கு எதிராக விதிக்கப்பட்ட தடைக்கு விஞ்ஞானபூர்வமான ஆதாரங்கள் இல்லை என்றும், மற்றும் 2020 செப்டெம்பர் 4 ஆம் திகதிய இற்றைப்படுத்தப்பட்ட உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களுக்கிணங்க நல்லடக்கம் செய்வது 'கலாசாரத் தெரிவுக்குரிய விடயமாக' இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாதலாலும்;

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அகற்றுதல் தொடர்பான அதன் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகளில், சர்வதேச மனித உரிமைகள் நியதிகள் மற்றும் தரநிலை களுக்கிணங்க இவ்விடயத்தைக் கையாளுமாறு 2022 நவம்பர் 25 ஆம் திகதியன்று சுகாதார அமைச்சின் செயலாளருக்குஆலோசனை வழங்கப்பட்டிருந்ததாதலாலும்;

2020 ஏப்பிறல் 11 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்ட 'கொவிட்-19 சூழ்நிலையில் உயிரிழந்தவர்களின் சடலங்களை முகாமைத்துவம் செய்வதற்கான தொழில்நுட்பக் குழுவினால்' அவ்வப்போது வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகள், 2020 நவம்பர் 29 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பணிப்புரைகள் மற்றும் விதப்புரைகளுக்கும், விஞ்ஞானபூர்வமாக நிறுவப்பட்ட ஆதாரங்களுக்கும் முரணாக அமைந்திருந்ததாதலாலும்;

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 10 ஆம் உறுப்புரையின் பிரகாரம், ஆளொவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராயிருத்ததற்கான அல்லது மேற்கொள்ளுவதற்கான சுதந்திரமுட்பட சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச் சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவராக இருப்பதாதலாலும்;

இலங்கையில் கொவிட்-19 தொற்றினால் மொத்தமாக உயிரிழந்த 16,817 ஆட்களில் 13,183 பாதிக்கப்பட்டவர்களின் சடலங்கள் அவர்களின் கலாசாரச் சடங்குகளுக்கு எதிராகக் கட்டாயமாகத் தகனம் செய்யப்பட்டமை, உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளடங்கலாக பல்வேறு சமூகங்கள் மற்றும் நாடுகளின் கரிசனைக்குரிய விடயமாக இருந்துள்ளதாதலாலும்;

நீதி, ஜனநாயகம் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில், கொவிட்-19 பெருந்தொற்றில் பாதிக்கப்பட்டவர்களின் சடலங்களை வலுக்கட்டாயமாகத் தகனம் செய்வதற்கு வழிவகுத்த பாரபட்சமான அரசாங்கக் கொள்கைகள் மற்றும் நிர்வாகப் பணிப்புரைகள் தொடர்பான விடயங்கள் 2020 மார்ச் மாதத்திலிருந்து பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்பட்டு வந்துள்ளமையாலும்;

விதந்துரைக்கப்பட்ட தர நியமங்கள் மற்றும் பாதுகாப்பான நடைமுறைகள், கலாசார விழுமியங்கள் மற்றும் மதச் சுதந்திரம் ஆகியவற்றை மீறும் வகையில், இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்களை அகற்றுதல் தொடர்பான சகல விடயங்களையும் ஆராய்ந்து, பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், தனது முன்மொழிவுகள் மற்றும் விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கும், மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மாத்திரம் வரையறைக்குட்படுத்தாது பின்வரும் விடயங்களும் உள்ளடங்கும் வகையில் பாராளுமன்ற விசேட குழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

(அ) நாட்டின் நற்பெயரைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், சம்பந்தப்பட்ட நிபுணர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து தேசிய கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வகுத்தமைத்தல் மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய மட்டங்களில் நாடுகளுக்கிடையில் நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுதல்;

(ஆ) இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அகற்றுதல் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை ஏற்றுக்கொள்வதில் ஜனநாயக விழுமியங்கள், மனித உரிமைகள் மற்றும் கலாசார மற்றும் சமய விழுமியங்களை மேம்படுத்துதல்;

(இ) பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் சட்டபூர்வத் தன்மையைப் பரிசீலித்தல் மற்றும் இதில் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்கள், அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள், தனியார்-துறை நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களின் வகைப்பொறுப்புக்கூறலை நுண்ணாய்வு செய்தல்;

(ஈ) எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல், மற்றும் நீதியை உறுதிப்படுத்துவதற்கான பொருத்தமான இழப்பீடுகள் மற்றும் நடவடிக்கைகளை விதந்துரைத்தல்; மற்றும்

(உ) மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய அல்லது அவற்றுக்கு இடைநேர்விளைவான அனைத்து விடயங்களையும் பரிசீலித்தல்.

2. (அ) குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், இந்தக் குழு பன்னிரண்டிற்கு (12) மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருத்தலாகாது.

3. இந்தக் குழு பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் —

(அ) தனது கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானித்தல்;

(ஆ) எவரேனும் நபரைத் தனது முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்தல்; எவரேனும் நபரை ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைச் சமர்ப்பிக்குமாறு வேண்டுதல்; மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை முழுமையாகப் பரிசீலிப்பதற்கு அவசியமானதெனக் குழு கருதும் எழுத்துமூலமான அல்லது வாய்மொழி மூலமான சான்றுகளைச் சேகரித்தல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்;

(இ) குழுவிற்கு உதவுவதற்காக சம்பந்தப்பட்ட துறைகளில் உள்ள நிபுணர்கள் மற்றும் வல்லுநர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல்; மற்றும்

(ஈ) அவ்வப்போது இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் அல்லது கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் கூட்ட அமர்வினை நடாத்துதல்.

4. இந்தக் குழு தனது முதலாவது கூட்டத்திலிருந்து மூன்று (03) மாத காலப்பகுதியினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கக்கூடிய அத்தகைய மேலதிக காலப்பகுதியினுள் தனது அறிக்கையைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.